இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை– 2008/2009
மட்டம் - 3
**LWU 1201** – அரசியலமைப்புச் சட்டம் - 1
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 20.03.2009 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்

01. 'வினோத உயன' எனக் குறிப்பிடப்படும் ஓர் தனியார் கேளிக்கை மைதானத்தினை நிர்மாணிப்பதற்காக 'பொது நோக்கத்திற்கு' என ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்கக் காணியினை சட்டமுரணாக கைமாற்றுவதற்கு கருவியாக சல்வீனிய சனனாயகக் குடியரசின் முன்னால் சனாதிபதி ரொபர்ட் ரவுண்டோ காணப்படார் என்ற அடிப்படையில் சல்வீனிய உயர் நீதிமன்றத்தில் அமரசிங்க மற்றும் சுமனபால ஆகிய இரு அரசாங்க உத்தியோகத்தர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றினை தாக்கல் செய்தனர். குறித்த நடவடிக்கை, நிதி அமைச்சர் மற்றும் அமைச்சரவையின் தலைவர் என்றவகையில் அமைந்த தம் அதிகாரப்பரப்பிற்குள் எடுக்கப்படவென எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டது என்ற காரணத்தினால் குறித்த பரிமாற்றலில் தமது பங்களிப்பு மிகக் குறைவானது எனக்கூறி தம்மீதான குற்றச்சாட்டுக்களை ரொபர்ட் ரவுண்டோ மறுத்தார். மேலும் அவர், நிதி அமைச்சின் செயலாளராக செயற்படும் திரு மரின்டோ அவர்களுக்கு இவ்விடயத்தினை தாம் கையளித்ததாகவும் அவர் அவ் அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்ததாகவும் தெரிவித்தார். எப்படியிருப்பினும் இவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் பொது உத்தியோகத்தர் ஒருவரது கடமைகளுக்கு உட்பட்ட முறையில் ரொபர்ட் ரவுண்டோ செயற்படத் தவறிவிட்டார் எனத் தீர்ப்பளித்தது. மேலும் சட்டவாட்சிக்கோட்பாட்டிற்கு அமையவும் அத்துடன் மக்களுக்குரிய வகையிலாக சொந்த மனசாட்சி மற்றும் நேர்மையான உணர்வு என்பவற்றுடனும் சனாதிபதியின் அதிகாரம் செயற்படுத்தப்படல் வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சட்டவாட்சி எனும் கோட்பாட்டின் பின்னணியில் மேற்கண்ட தீர்ப்பினை நுணுக்கமாக பரீட்சிக்குக. சல்வீனியாவின் அரசியலமைப்பு இலங்கையின் அரசியலமைப்பை ஒத்தது என்ற அடிப்படையில் நீர் இவ்வினாவிற்கு விடையளிக்க வேண்டும்.

02 (அ) இலங்கையின் நவீன அரசியல் அமைப்பின் பரிணாமத்தினைப் பற்றிய வரலாற்றினை பகுப்பாய்வு செய்க. உமது பகுப்பாய்வானது 1802ம் ஆண்டு தொடக்கம், டொனமூர் அரசியலமைப்பின் உருவாக்கம்வரையிலான காலப்பகுதியினை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

(ஆ) "சோல்பரி அரசியலமைப்பானது அடிப்படையில் 'வெஸ்ட் மினிஸ்டர் வடிவ' அரசாங்க முறையினை முன்மொழிந்தது. இவ்வடிவத்தின் அதி பிரத்தியேக தோற்றப்பாடுகள் சில, முன்னைய பிரித்தானிய காலனித்துவ நாடுகளின் சுதந்திரமான சட்டங்கள் மற்றும் அதன் புதிய சுதந்திர சட்டவாக்கங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளது"

The Evalution of Constitutional Governance in Sri Lanka, 1st Edition (2007) by Lakshman Marasinghe at p.106.

மேற்கண்ட கூற்றின் பின்னணியில் சோல்பரி அரசியலமைப்பின் விசேடமான தோற்றப்பாடுகளை பரீட்சிக்க. இயைபுடைய அரசியலமைப்பு பிரிவுகளை ஆராய்வதனூடு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

03. (அ) காலனித்துவ வடிவ அரசியலமைப்பில் இருந்து விடுபட்டுப் பிரிந்து செல்லும் செயன்முறையின் ஆரம்பமாக 1972ம் ஆண்டின் அரசியலமைப்பினை கருதலாம். இம்மாற்றம் ஐக்கிய இராச்சியத்துடன் இலங்கை கொண்டிருந்த முன்னைய அரசியலமைப்புத் தொடர்பு முற்றாக முறிவடைவதனை உள்வாங்குகிறது.

இக் கூற்றுடன் நீர் உட்படுகின்றீரா? இயைபுடைய அரசியலமைப்புப் பிரிவுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக. உமது பகுப்பாய்வினை இன்னும் இரண்டு நியாயாதிக்கங்களுடன் ஒப்பிடுவதற்கு நீர் வேண்டப்படுகின்றீர்.

(ஆ) அடுத்தவருடம் சட்டப்பாடசாலை ஒன்றில் இணைவதற்கு உத்தேசித்துள்ள நிமால், ரொசாவா அரசியலமைப்பினைப்பற்றிய ஓர் கட்டுரையை வாசிக்கும் பொழுது குழப்பமடைகின்றான். கட்டுரையில் காணப்படும் பின்வரும் வாக்கியங்களை அவன் புரிந்துகொள்ளவில்லை.

- "ரொசாவா அரசானது ஓர் <u>எழுதப்பட்ட இறுக்கமான மற்றும் வழங்கப்பட்ட அரசியலமைப்பினைக்</u> கொண்டுள்ளது."
- "ரொசாவா அரசானது தற்போதுள்ள <u>ஒற்றையாட்சி</u> அரசியலமைப்பினை <u>சமஷ்டியாட்சி</u> வடிவுக்கு மாற்றுவதற்கு கருதுகின்றது."
- ரொசாவாவில் <u>மூன்று அடிப்படை அரசாங்க அங்கங்கள்</u> காணப்படுகின்றன.

நிமாலிற்கு இவ் வாக்கியங்களை விளக்குவதற்கு நீர் வேண்டப்படுகின்றீர்.

04. கவினியா அரசானது மரிலியா அரசிடம் இருந்து 2007ம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. கவினியா தமது முதலாவது குடியரசு அரசியலமைப்பினை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. கவினியாவின் அரசியலமைப்புச் சபையானது, நீதித்துறை சுதந்திரம் தொடர்படைய விளக்கமான பிரிவுகளை அரசியலமைப்பு கொண்டிருந்தாலே கவினியாவின் அனைத்து மக்களதும் சுதந்திரம் மற்றும் சமத்துவம் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு முன்னேற்றப்பட முடியும் என்ற உறுதியான கருத்தினைக் கொண்டுள்ளது.

இக்கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக. மேலும் இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் இருந்து உதாரணங்களைப் பெற்று உமது விடையினை விளக்குக

05. (அ) "... எதிர்கால பாராளுமன்றம் சட்டவாக்க மீயுயர்த்தன்மையை அனுபவிக்க முடியாதபடியான புதிய ஏற்பாடுகளை அதன் கீழ் உருவாக்குவதற்கான அதிகாரத்தை பராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் உள்ளடக்குகின்றது. தனிநபர்களின் அடிப்படை உரிமைகள் அல்லது அடிப்படை அரசியலமைப்பு கோட்பாடுகளுக்கு முரணாகக்கூடிய சட்டங்களுக்கு எதிரான போதிய பாதுகாப்புக்களை வழங்குகின்ற அரசியல் முறைமை ஒன்றினைக்காட்டக்கூடியதாக இருப்பின், சட்டவாக்க மீயுயர்த்தன்மைக் கோட்பாடு தக்கவைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற வாதம் வலுவாக்கப்படும்."

Constitutional and Administrative Law, 12th Edition (1997) By A.W. Bradley and K.D. Ewing, at p.85.

பாராளுமன்ற மீயுயர்த்தன்மை என்ற கோட்பாட்டின் பின்னணியில் மேற்கண்ட கூற்றினை நுணுக்கமாக மதிப்பிடுக. நீர் இயைபுடையது எனக்கருதும் ஏனைய அரசியலமைப்புக்கோட்பாடுகளுடனும் உமது விடையை ஆதாரப்படுத்தலாம்.

(ஆ) பாராளுமன்ற சனனாயகத்தினுள் ஓர் பிரசை நியாயமற்ற அல்லது தவறிழைக்கின்ற அரசாங்கத்திற்கு எதிராக பல பாதுகாப்புக்களை கொண்டிருக்கின்றார். இவ் ஒவ்வொரு நிவாரணங்களும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பயன்வலுவுடையதாக இருப்பினும், அவை அனைத்திற்கும் மட்டுப்பாடுகள் உண்டு. பிரசைகளின் பாதுகாப்பிற்கு விளைதிறனுள்ள வகையில் பங்களிப்பு செய்யும் குறைகேள் அதிகாரியின் காரியாலயமும் அத்தகைய பாதுகாப்புக்களில் ஒன்றாகும்.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? குறைகேள் அதிகாரியின் (Ombudsman) நிவாரணத்தினை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதற்கு என்னென்ன திருத்தங்களை நீர் முன்மொழிவீர்?

06. 8 மாதத்திற்கு மேலாக தினிடா அரசானது அரிசியின் விலையேற்றத்தினால் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்றது. உலக சந்தையிலே அரிசியின் விலை திடீரென அதிகரித்தமையை அடிப்படையாகக்கொண்டு தினிடா அரசாங்கத்தினால் அரிசி விலை உயர்வுக்கான காரணம் கூறப்பட்டது. அண்மையில் 70 சதவீதத்திற்கும் அதிகமாக உலக சந்தையில் அரசியின் விலை வீழ்ச்சியடைந்தது. எப்படியிருப்பினும் இந்நிலைப்பாடு தொடர்பில் தினிடா அரசு அமைதி காத்ததுடன் பொது மக்களின் பல்வேறு எதிர்ப்பார்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் அரிசியின் விலை மாற்றம் எதுவுமின்றி அப்படியே இருந்தது. அதே சமயம் அரசியின் விலையை கேள்விக்குட்படுத்தி எதிர்க்கட்சி உறுப்பினரான ஜீவந்தி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். இவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் உடனடியாக வலுவுக்கு வரும் வகையில் அரிசியின் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்திற்கு கட்டளையிட்டது. எவ்வாறாயினும் உயர்நீதி மன்றத்தின் கட்டளையை அமுல்படுத்தப்போவதில்லை என அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானித்தனர் என்பதுடன் இப்பிரச்சினை மீதான நீதிமன்ற கட்டளைகளை இனிமேலும் அரசாங்கம் அமுல்படுத்தப்போவதில்லை என அமைச்சரவை அறிவித்தது.

சட்டமாணிப்பட்டப்படிப்பினை மேற்கொண்டு வரும் கிருஷாந்த் மற்றும் நதீஷா ஆகிய இரு மாணவர்கள் இந்நிலமை தொடர்பில் ஆராய்கின்றனர். கிருஷாந்த், பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரமானது அரசாங்கத்தின் நிறைவேற்றுக்கிளையிடமே உள்ளது என்ற கருத்தினைக் கொண்டுள்ளான்.

ஆனால் நதீஷா குறித்த அவ் நிறைவேற்று அதிகாரத்தினை பயன்படுத்துவது காரணத்துடனானதா? நியாயமானதா? மற்றும் எதேச்சாதிகாரமானதா? அல்லது நியாயமற்றதா? என்பதனை தீர்மானிக்கும் அதிகாரம் நீதித்துறையின்பால்பட்டது என வாதிடுகின்றாள்.

உரித்துடைய அரசியலமைப்பு கோட்பாடுகளின் பின்னணியில் மேற்கண்ட வாதப்பிரதிவாதங்களின் சரியான தன்மையை ஆராய்க.

உமது விடையானது உரிய அரசியலமைப்பு பிரிவுகளுடனும் தீர்ப்புச்சட்டங்களுடனும் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தினிடாவின் அரசியலமைப்பு இலங்கையின் அரசியலமைப்பினை ஒத்தது எனக் கருதுக.

07. சட்டமாணிப்பட்டப்படிப்பிற்கு ஆயத்தமாகும் மாணவன் என்றவகையில் நீர் 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி என்ற தலைப்பில் ஓர் விரிவான கட்டுரையை சமர்ப்பிப்பதற்கு வேண்டப்படுகின்றீர். மேலும் சனாதிபதி மீது மட்டுப்பாடற்ற அதிகாரங்களை சுமத்துவதற்கு எதிரான கருத்துக்களையும் நீர் ஆராய வேண்டும் என எதிர்பார்க்கபடுகின்றது. குறித்த கட்டுரையை சமர்பிக்கும் போது அதில் நீர் கட்டாயமாக இயைபுடைய அரசியலமைப்பு பிரிவுகளையும் வழக்குகளையும் எடுத்துக்காட்டி ஆராய வேண்டும்.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் <u>இரண்டினைப்</u> பற்றி சிறுகுறிப்பு வரைக.

(அ) மக்கள் தீர்ப்பு;
(ஆ) அரசியலமைப்புத் திருத்தங்கள்;
(இ) சமூக அக்கரை வழக்கு.

(பதிப்புரிமையுடையது)